# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
# S.C.No.22/2013

2025 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 28 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராசு (அ.சா.4) | தொழில் | : | விவசாயம் |
| த/பெ., | : | திரு.அங்கமுத்து | வயது | : | 56 |
| க/பெ. | : | திரு. | | | |
| கிராமம் | : | பொட்டம்பட்டி, கணக்கன்பட்டி | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 28.04.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளார்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் கணக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். எனக்கு கணக்கன்பட்டியில் பிரதான சாலையின் அருகில் காடு உள்ளது. சுமார் 10, 15 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு நாங்கள் வீட்டில் இருந்தோம். அன்றைய தினம் பெண்ணை வைத்து லாரியை நிறுத்தி பணத்தை பிடுங்கிவிட்டதாகச் சொன்னார்கள். காலை 8.00 மணியளவில் நானும், பக்கத்துத்தோட்டத்துக்காரர் தர்மராஜ் என்பவரும் அங்கு சென்று பார்த்தோம். போலீசார் அங்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். காடு என்னுடையதா என்று கேட்டார்கள். நான் ஆமாம் என்று சொன்னேன். அதற்கு ஆதரவாக என்னிடம் சாட்சி கையெழுத்துகேட்டார்கள். நான் சாட்சிகையெழுத்து போட்டேன். அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் கையொப்பமிட்ட பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். அதில் அருகில் என்னுடைய காடு இருப்பதாக எழுதப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. எத்தனை பேர் பாதிக்கப்பட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இதுபோன்ற சம்பவம் அடிக்கடி நடந்துள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடந்து சுமார் 10, 15 வருடங்கள் இருக்கும். வருடம் 2010 ஆக இருக்கும். நான் கூறும் வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் நான் சொல்லும் ஆண்டு தவறு என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ நேரம் அதிகாலை 3.00 மணி என்று சொன்னார்கள். யார் சொன்னார்கள் என்றால் தர்மராஜ்தான் என்னிடம் சொன்னார். தர்மராஜ் சொன்னதால் நான் கையொப்பமிட்டேனா என்றால் ஆமாம். என்னை விசாரித்த சார்பு ஆய்வாளரின் பெயர் ராஜேந்திரன். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி ராஜேந்திரன் அல்ல என்றும் நான் சொல்லும் வழக்கு வேறு என்றும் சொன்னால் சரியல்ல. அதில் எத்தனை எதிரிகள் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தை குறியீடு செய்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. போலீசார் கையெழுத்துப் போடச் சொன்னதால் கையெழுத்துப் போட்டேனா என்றால் இல்லை, எங்கள் காட்டில்தான் சம்பவம் நடந்தது, லாரி தடத்தில் நின்று கொண்டிருந்தது. ரோட்டிற்கும் தடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ரோடும் தடமும் ஒன்றுதான். சம்பவம் பிரதான சாலையின் முன்புதான் நடந்ததா என்றால் ஆமாம்.

(4 மற்றும் 5 எதிரிகள் மேற்சொன்ன குறுக்கு விசாரணையை தக்கவைத்துக்கொள்கிறார்கள்)

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.04.28 18:08:53 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**